பதிவுத்துறைத் தலைவர் அலுவலகர்
சென்னை 28

சுற்றறிக்கை

எண்.7482/எல்1/2003-1 நாள் 31.3.2003.

பொருள். மதிப்பு நிர்ணயம்- வழிகாட்டி மதிப்பு நிர்ணயம்- இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 ஏ(1) ன் கீழ் ஆவணங்கள் அனுப்புதல் கட்சிக்காரர்களுக்கு தெரிவித்தல்- தொடர்பாக

பார்வை. 1.பதிவுத்துறைத் தலைவர் சுற்றறிக்கை எண்.44278/எல்1/2002 நாள் 11.9.2002.
2.பதிவுத்துறைத் தலைவர் சுற்றறிக்கை எண்.44278/எல்1/2002 நாள் 21.1.2003.

.....

வழிகாட்டி மதிப்பை விட மதிப்புக்குறைவில் ஆவணங்கள் பதிவு செய்யப்படின் மதிப்புக்குறைவு தொடர்பாக இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47ஏ(1) ன் கீழ் ஆவணங்கள் அனுப்பப்படுகின்றன. இது தொடர்பாக பார்வையில் குறிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் மூலம் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

2. வழிகாட்டி மதிப்பை விட மதிப்புக்குறைவில் ஆவணங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படுதலே ஆவணம் மதிப்புக்குறைவில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என பதிவு அலுவலர் முதல் நிலையிலேயே கருதலாம். இதற்கான காரணத்தைத் தெளிவாக குறிப்பிடவேண்டும். ஆவணங்கள் இந்திய முத்திரைச்சட்டம் பிரிவு 47ஏ(1)ன் கீழ் தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பப்படுகிறது என்ற விவரத்தை கட்சிக்காரருக்கு துணை ஆட்சியர்(முத்திரை)க்கு அனுப்பப்படுகிறது என்ற விவரத்தை கட்சிக்காரர்களுக்கு அறிவித்து அதன் நகலினை தனித்துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பப்படும் விவரங்களுடன் அனுப்பப்படுவதை பதிவு அலுவலர்கள் உறுதி செய்திட அறிவிக்கப்படுகிறது.

3. இக்கடித வரவை துணைத் தலைவர்கள் ஒப்புதல் செய்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. துணைத் தலைவர்கள் மாவட்டப் பதிவாளர்களிடமிருந்தும், மாவட்டப் பதிவாளர்கள் சார்பதிவாளர்களிடமிருந்தும் ஒப்புதல் பெற்றிடவும் அறிவிக்கப்படுகிறது.

பதிவுத்துறைத் தலைவருக்காக,

பெறுநர்

அனைத்து துணைத் தலைவர்கள்
அனைத்து மாவட்டப் பதிவாளர்கள்.

Verified RealEstate ™